COLONIAL SECRETARY'S OFFICE
RECEIVED
AU 14
1866
COLOMBO





# பாலியர் நேசன்.

நானே நல்ல மேய்ப்பன்.

குழந்தைகளை என்னிடத்தில் வரவிடுங்கள், தடைபண்ணாதிருங்கள்.

௩ம் புத்தகம்.] யாழ்ப்பாணம் ௲௮௱௬௰௬ ௵ ஆவணி ௴. இதன்விலை வருஷம் ஒன்றுக்கு, அரை ரூபாய். சங்கியை, ௮.

### பத்திரத்தின் விலை.

| | | | | |
|---|---|---|---|---|
| ஒரு பிரதிவாங்குவார்க்குவிலை | | | சி. | ௧ |
| ஒரேமுறையில் ௧௦ | " | " | " | ௯ |
| ௨௦ | " | " | " | ௧௭ |
| ௨௫ | " | " | " | ௨௧ |
| ௫௦ | " | " | " | ௪௦ |
| ௧௦௦ | " | " | " | ௭௫ |

தபாற்செலவு பிறம்பாய்வரும்.

### SUBSCRIPTIONS.

1866.

| | £ | s | d |
|---|---|---|---|
| Batticotta Y. C. A. | | 4 | 10 |
| Mr. Joseph S. Fry | | | 6 |
| அ. அகம்மதுலெவ்வைமரைக்காயர் | | 3 | 0 |

### ஆவணிமாதம்.

இம்மாதம் வருஷத்தின் எட்டாம் மாதமெனப்படும். முன் உரோமர் இதற்கு ஆறும்மாதமென்று அர்த்தங்கொள்ளும் செக்ஸ்றில்லிஸ் (Sextiles) என்று பெயரிட்டார்கள். யூதரும் உரோமரும் பங்குனியை முதல் மாதமாகக் கொண்டதினால் ஆறும்மாதமெனப் பேரிட்டார்கள். இம்மாதத்தில் உரோம இராயனாகிய ஒக்தேவியஸ (Octavius) என்பவர் தானடைந்த பல செயத்தினாலும் முதல் பிரதிகாவலத்துவத்தில் ஏற்பட்டதினாலும் அவர் நாமத்துக்குக் கனமாய் ஆகுஸ்து (August) மாதமெனப் பேரிடப்பட்டது. இம்மாதத்தில் நல்லூரிற் கோவிலிற் திருவிழாக் கொண்டாடப்படும். ஆவணிமூலம் சைவருக்கு மகாவிசேஷித்த தினங்களிலொன்று; ஆவணிஅவிட்டத்திற் பூணூல்அணிபவர்கள் தங்கள் பூணூல்களை மாற்றுவார்கள். பனங்காய் பினைதல் ஆரம்பமாகும். ஆவணி புரட்டாசி முதற்பருவமாகிய கார்காலமாக இந்துதேசத்தார் கொள்ளுவார்கள்.

### உலகத்தின் ஏழுஅதிசயங்கள்.

௧. எபேசுவிலுள்ள தியானாள் கோவில்.

உலகத்திற் புதுக்காட்சிகளான ஏழு அதிசயங்களுண்டென்று கற்றறிந்த சகலரும் ஒத்துக்கொள்ளுகிறார்கள். அவைகளைச் சங்கியைக்கு ஒன்றாக ஏழையும் ஏழுசங்கியையில்அச்சடிக்கும்படி எண்ணுகிறோம். இப்பொழுது முதலாவதாக எபேசின் தியானாள் விக்கிரக கோவிலைப் பற்றிப் பார்ப்போமாக.

எபேசு சின்ன ஆசியாவிலுள்ள கீர்த்திபெற்ற ஒரு பட்டினம். அக்காலத்தில் கீழ்த்திசையாரின் வியாபாரங்களுக்கு இது பிரதான இடமாயிருந்தது. இப்பட்டினத்திலிருந்து உள்நாடுகளுக்குச் செல்லும் பெரும்பாதைகள் மிகுதியாகவிருந்தது. எண்ணிறந்த சனங்கள் கடல்வழியாயுங் கரைவழியாயும் இப்பட்டினத்திற்கு வருவார்கள்.

இந்நகரத்துக்கு மேற்கில் கடலும் மற்றமூன்றுபக்கத்திலும் மலைச்சிகரங்களுமிருந்தது. இந்நகரம் கேஸ்தர் நதியிற் கட்டப்பட்டிருக்கின்றது. துறைமுகத்துக்குப் பனோர்மஸ் என்றுபேர். எபேசுநகரத்தின் சௌந்தரியங்களில் தியானாள்தேவியின் கோவிலே அதி உச்சிதமும் உத்தமமுமாயிருந்தது.

அந்நகரத்தில் முற்காலத்தில் மாட்சிமையுள்ள ஒரு கோவிலிருந்ததாம். எரோஸ்திரேத்து என்னும் பண்டிதன் தனது நாமம் எப்பொழுதும் நிலைநிற்கும்படிக்காக மகா அலெக்சந்தரின் செனனதினத்தின் இராத்திரியில் அக்கோவிலில் நெருப்புவைத்தான். சின்ன ஆசியாவிலுள்ள பல கிரேக்கர் ஒருமனப்பட்டு தகிக்கப்பட்ட கோவிலுக்குப்பதிலாக பணஞ்சேர்த்து இன்னும் ஒரு கோவிலை அலங்காரமாகக் கட்டிமுடித்தார்கள். அது நிறைவேறுவதற்கு ௨௱௨௰ வருஷம் சென்றது. அது பனோர்மஸ் துறைமுகத்துக்கு உயரமான ஓர் மேட்டில் வெண்கற்களால் (White marble) கட்டப்பட்டிருந்ததால் அத்துறையில் வருமனைவரும் அதிசயித்துப் பிரமிக்கத்தக்கவிதமாய் சூரியகாந்திபோலச் சோதிமயமாயிலங்கும். தரை சதுப்புநிலமானதால் மரக்கரியும் ஆட்டுமயிரும் போட்டு அதின் அஸ்திபாரத்தைக் கெட்டித்து பெருஞ்செலவிட்டுச் செய்தார்கள். அடித்தளம் விஸ்தாரமுள்ளதும் படிகளுள்ளதுமாயிருந்தது. இந்த மேட்டின்மேல் ௪௱௨௫ அடி நீளமும் ௨௱௨௰ அடி அகலமுமுள்ள ஒரு கோவில் கட்டப்பட்டிருந்தது. கோவிலைச்சுற்றி ௱௨௭ வெண்கற்றூண்கள் நிறுத்தியிருந்தன. ௬௰ அடி நீளம் கொண்ட இத்தூண்கள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு இராசாவினாற் கொடுக்கப்பட்டது. இவைகளில் ௩௬ தூண்கள் சித்திர வேலைகளுள்ளவைகளாகவிருந்தன. விக்கிரகம் வசித்த உட்கோவிலும் சுற்றுத்தாழ்வாரங்களும் நீக்கி மற்ற இடையெல்லாம் மேற்கூரையின்றி வெளியுள்ளதாக விருந்தது.

கோவிலின் உட்புறமும் வெளிப்புறமும் வடிவிலும் அழகிலும் சரிசமமாகவிருந்தது. மேற்கூரை பச்சை ஈவாக்கற்றூண்களால் தாங்கப்பட்டிருந்தது. இத்தூண்களில் எட்டு இக்காலவரைக்கும் கொன்ஸ்தாந்திநோப்பிலுள்ள சோபியா (St. Sophia)என்னும் பள்ளிவாசலில் நிற்கின்றது. வேதிகையில் பலவிடங்களிலும் கொத்துவேலையான பிரதிமைகள் வெட்டப்பட்டிருந்தது. சுவர்களில் அழகிய சித்திரப் படங்கள் தூக்கியிருந்தது. கோவிலின் வெளிப்புறம் அரைக்கால்மைல் சுற்றளவுள்ளதும் அடைக்கலம்புகும் யாவர்க்கும் தஞ்சமும் புனிதமுமுள்ளதாயிருந்தது. இராசாக்களும் பிரபுகளும் தங்கள் காணிக்கைகளை அதின் மதில்களுக்குள் இல்லடைக்கலம் வைப்பதினால் கணக்கற்ற திரவியம் அம்பாரமாய்க் குவிந்திருந்தது. இவ்வளவு பெரும்புகழ்படைத்த கோவில் உலகத்தில் எவ்விடத்திலுங் காணக்கிடையாது. இக்கோவிலுக்குள் வைக்கப்பட்டிருந்த விக்கிரகம் கருங்காலியினால் அவலட்சணரூபமாய்ச் செய்யப்பட்டிருந்தது. உயிர்க்குப் பொறுப்பான சாயல் என்றுசொல்ல பல ஸ்தனபாரங்கள் அதிற் சித்திரித்திருந்தது. அதின் தலைக்கு ஒருவகைக்கிரீடமுடி அரைக்குக்கீழ் பற்பல மிருகசாதிப் பாவைகளுள்ளதாயிருந்தது. இது உழுத்துப்போகாமல் பின் அரக்கு முதலியன இட்டுவைத்தார்கள். வருஷந்தோறும் திருநாளுக்குப் போகிறவர்களுக்குத் தட்டார் தியானாள்தேவியின் சுருபத்தைச் செய்து விற்பார்கள்.

தற்காலத்தில் கோவில் எவ்விடத்திலிருந்ததென்று திட்டமாய்த் தெரியவில்லை. அதின் மரங்கள் கற்கள் முதலியவைகளை எடுத்து பலரும் பல கட்டிடங்களைக் கட்டியிருக்கிறார்கள். எபேசுவில் தியானாளின் சுருபங்களைச் செய்து வியாபாரம்பண்ணினவர்களுக்குள்ளும் அவைகளை நமஸ்கரித்து வந்தவர்களுக்குள்ளும் பவுல் அப்போஸ்தலனுடைய பிரசங்கத்தால் உண்டுபட்ட குழப்பத்தைப்பற்றி அப்போஸ்தலரின் கிரிகை ௧௯ம் அதிகாரத்தில் வாசித்துப்பார்க்கவும்.

### தேவனே தஞ்சம்.

தம்பிப்பிள்ளை என்று பெயர்பபட்ட ஒரு பையனிருந்தான். அவனுடைய பிதா மிகவுந் துஷ்டன். தம்பிப்பிள்ளை ஓய்வுநாட்பள்ளிக்கூடத்திற்குச் சென்று தேவவாக்குகளைப் படித்து தேவனை நேசிக்கவும் அவர் கற்பனைகளுக்குக் கீழ்ப்படியவும் படித்ததுமன்றி எல்லாக்காரியத்திலும் பெற்றோருக்குக் கீழ்ப்படியவும் வேண்டுமென்று படித்திருந்தான். இந்தப் பிள்ளை தனது துஷ்டப்பிதாவைப் பிரியப்படுத்தும்படி எல்லாக்காரியங்களை ஒழுங்காகவும் பிதாவின்மனதுக்கு ஏற்றதாகவுஞ் செய்துவருவான். அப்படியிருந்தும் அவன் பிதா தயவற்றவனும் முகாந்திரமின்றித் தன் பிள்ளையை உறுக்கிக் கண்டிக்கிறவனுந் தண்டிக்கிறவனுமாகவிருந்தான்.

ஒரு நாள் இரண்டுமைலுக்கப்பாலுள்ள ஓரிடத்திற்போய் ஒரு மூட்டை உப்பு வாங்கும்படிக்கு அனுப்பினான். அது வெகுதூரமாகவிருந்தும் பையன் முறுமுறாமல்போனான். போகும்பொழுது வழிதுலையும்படிக்காகத் தான்படித்த ஞானப்பாட்டுகளைப் பாடிக்கொண்டும் வேதவாக்கியங்களை மனப்பாடமாகப்படித்துக்கொண்டும்போனான். குறித்தஇடத்திற்சேர்ந்து உப்புவாங்கிக்கொண்டு வீட்டுக்குத் திரும்பினான். உப்புக் கனமாகவிருந்ததினால் வழிமெத்தத்தொலையாகத் தோன்றினது. அப்பொழுது ஒரு தடி முறித்து அதின் ஒரு அந்தத்தில் உப்புச்சாக்கைத் தூக்கி தோளில் தடியை வைத்துக்காவிக்கொண்டுவந்தான். அப்படிக் காவிவருகையில் சுமை இலகுவாகவிருப்பதைக் கண்டு சந்தோஷத்துடன் நடந்துபோனான். இன்னும் வர வர லெகுவாகக் காணப்பட்டதால் காரியம் என்ன! நான் சந்தோஷிப்பதால் சுமை குறைவாகத் தோற்றுகிறதோ அல்லது வேறுகா

முண்டோவென்றறியும்படி தான் வந்தவழியைத் திரும்பிப்பார்த்தான். உடனே நெடும்வரியாக ஒரு வெள்ளைவரி காணப்பட்டது. நெஞ்சு இடிக்க சுமையைத் தோளைவிட்டிறக்கி அந்த வரி என்னவென்று பார்த்து உப்பு எனக் கண்டான். சாக்கிலிருந்த ஒருதுவாரத்தால் அரைவாசி உப்பனவுக்குக் கொட்டுண்டுபோனது.

என்னசெய்யக்கூடும்? கொட்டுண்ட உப்பை அள்ளிக்கொள்ளக்கூடாது. திரும்பிப்போய்க் கொள்ளுவதற்குக் காசில்லை. பிதாவுக்குப் பொய்சொல்லக்கூடாது. பிதா தனக்கு என்னசெய்வாரென்றறிவான். பிதா இரக்கமின்றிக் கொடுமையாக அடிப்பாரென்றறிவான். இவைகளினால் மனங்கலங்கினின்றான். ஒரு பற்றைக்குச் சமீபத்தில் நின்று உரத்தழுதான். அப்படி அழுகையில் அவன் படித்த ஒருவசனம் நினைவில்வந்தது. "ஆபத்துக்காலத்தில் என்னை நோக்கிக் கூப்பிடு; நான் உன்னை விடுவிப்பேன், நீ என் மகிமையைப் பிரகாசிக்கப்பண்ணுவாய்" என்னும்வசனத்தைப்பற்றி மறந்துவிடாதேயுங்களென்று உபாத்தியாயர் வற்புறுத்திச் சொன்னதை நினைத்தான். இவ்வசனம் நினைவில்வந்தவுடன் பையன் எழுந்து பற்றைக்கு மறைய முழந்தாட்படியிட்டு தனக்கு நேரிட்ட தொல்லைகளைத் தேவனுக்குச்சொல்லிப் பிரார்த்தித்தான். அப்படி அவன் பிரார்த்திக்கையில் அவ்வழியாகப்போன ஒருமனுஷன் அச்சத்தத்தைக்கேட்டுத் தரித்துநின்று கவனித்தான். இவன் ஒரு செட்டியாபாரி. இந்தப்பிள்ளையையும் இவன் பிதாவையும் அறிந்தவன். வழியில் நெடுக உப்புக்கொட்டுண்டிருப்பதையும் பற்றைக்குப் பக்கத்தில்அரைவாசிச்சாக்கில்உப்பில்லாமலிருப்பதையுங்கண்டு பிள்ளை விம்மி உரத்தசத்தமாக அழுது தேவனிடத்தில் பிரார்த்திப்பதையுங் கேட்டு காரியத்தை மட்டிட்டுக்கொண்டு இவனுக்கு எப்படியும் உதவிசெய்யவேண்டுமென்று நினைத்துக்கொண்டு பிள்ளையின் பிதா வீட்டுக்குப்போய் அவரைக் கண்டு உமக்கொருகாரியஞ்சொல்லவேண்டுமென்றான். அவர் என்ன என்க, நீர் உமது பிள்ளையை ஒருசாக்கு உப்புக்கொண்டுவரும்படி அனுப்பினீரா என்க, ஆம் என்றார். அவன் அதிற் பாதி வழியிற் கொட்டிப்போட்டான் என்க, கொட்டிப்போட்டானா நல்லது வரட்டும் அவனுக்கு நல்லபூசைகொடுப்பேன் என்றார். அந்த வியாபாரி அப்படிச்செய்யாதேயும் அவன் ஒரு நல்லபிள்ளை. அவன் கொட்டவேண்டுமென்று கொட்டவில்லை. முழுச்சாக்கு உப்புக்கும் வேண்டியவிலை நான் தருகிறேன். நாளைக்கு நீர் போக்காட்டி உப்புவாங்குவிக்கலாமென்றான். பிதா ஆச்சரியப்பட்டு பணங்கிடைப்பதால் அடிக்கவில்லையென்று வாக்குக்கொடுத்தான். வியாபாரி பணத்தைக்கொடுத்து தன்வழியேபோனான்.

சற்றுநேரத்தால் அந்தப்பிள்ளை வீட்டுக்குவர பிதா வாசலண்டையில் நின்று பொடியா இவ்வளவும் என்னசெய்தாய் காரியமென்னவென்க, உள்ளம் படபடவென்ன சரீரம்பதற நடந்தகாரியத்தைச்சொல்லி ஈற்றில் உப்பைக்கொட்டினதற்காக மிகவுந் துக்கப்படுகிறேன். கண்டவுடன் ஓட்டையை இறுக்கிக் கட்டினேன் அதிற்பிறகு கொட்டவில்லையென்றான். அப்பொழுது பிதா போனதுபோகட்டும் வந்து சாப்பிடு. இனிமேல் ஒருநாளைக்குப் போய் வாங்கலாமென்றான். பிள்ளை இப்படி ஒருக்காலுங் காணாதகாரியத்தைக்கண்டு அதிசெயப்பட்டு சாப்பிடும்பொழுதெல்லாம் "நான் உன்னை விடுவிப்பேன் நீ என் மகிமையைப் பிரகாசிக்கப்பண்ணுவாய்" என்றவாக்கு மனதில் நெடுக அசைந்துகொண்டிருந்தது. சாப்பிட்டுமுடிந்தவுடன் தான் செபம்பண்ணுமிடத்திற்கோடித் தேவனுக்கு ஸ்தோத்திரஞ்செலுத்தினான்.

பிள்ளைகளே இது நற்படிப்பினையைக் கொடுக்கிறது உங்கள் ஆபத்துக்களில் ஆரிடம் போகிறீர்கள். மனுஷர் சகாயஞ்செய்ய வல்லவர்களல்ல. தேவனிடம் போங்கள் அவர் துன்பத்தை இன்பமாக்குவார்.



யானையும் பிரயாணிகளும்.

மனுஷர் பிரயாணம்பண்ணுந் தன்மைகளைக் குறித்து முன் இரண்டு விதத்தைக் காட்டினோம். அவையாவன, சக்கரமற்ற பண்டிகளிற் நாய்களைக்கட்டி உறைந்த பனிமேல் பயணம்பண்ணுவதையும் தண்ணீர் கிடையாத வனாந்தரங்களிலும் மற்றுமிடங்களிலும் ஒட்டகங்களின்மேல் ஏறிப் பயணம்பண்ணுவதையுங் காட்டினோம். இந்தப்படம் மனுஷரும் சாமான்களும் யானைமீதேறிப் பயணம்பண்ணும் விதத்தைக் காட்டுகின்றது. இவ்விதம் பெரும்பாலும் வடஇந்தியாவைச்சேர்ந்த நாடுகளில் வழங்குகின்றது. யானைமீது ஏறுதல் மகா பெருமையைக்காட்டும். பெரும்பாலும் இராசாக்களும், பிரபுக்களும், பிராமணரும் ஏறிப் பயணம்பண்ணுவார்கள். இந்தப்படத்தில் மூன்று யானை காணப்படுகின்றன. அதுவுமன்றி ஒரு குதிரையும் நிற்கின்றது. பெரிய யானைமீது மூன்றுமனுஷர் ஏறிக் குடைபிடித்துக்கொண்டிருக்கிறார்கள். யானையின் கழுத்தின்மீது பாகன் துறட்டியைக் காதில்மாட்டி நடத்திக்கொண்டு போகிறான். பின்னொரு யானை தண்ணீரில் நீந்துகின்றது.

பிள்ளைகளே, இப்பெரிய யானைகளை மனுஷர் வசப்படுத்தி அவைகளைத் தங்கள் பாவிப்புகளுக்காகச் செய்யும்படிக்குச் செய்த கர்த்தாவை மறந்துவிடாதேயுங்கள். மனுஷனுடைய அதிகாரம் எப்படிக்கொத்த துஷ்ட பிரமாண்ட மிருகங்களின்மேலுஞ் செல்லும்படிக்கான இயல்பைத் தேவனே மனுஷருக்குக்கொடுத்தார்.

## மிகுந்த விருப்பம்.

இந்த முகவுரையை விளக்குவதற்கு நடந்த ஒரு திஷ்டாந்தத்தை எழுதுகிறோம். ஸ்பானியதேசத்தில் ஒருவர் வேதபுத்தகங்களையும் மற்றும் சன்மார்க்கத்துக்குரிய புத்தகங்களையும் விற்றுவரும்பொழுது மிகவும் இளைத்தவராய் ஒரு கிராமத்திற்சேர்ந்தார். நடையினாற் கால் புண்ணாகநொந்து வலிக்க வயிற்றுப் பசியெடுக்க சோர்பாக நிற்கையில் ஒரு உரோமான்குரு அவரைக்கண்டு உமது மூட்டை அல்லது சிப்பக்கட்டு என்ன என்றார். அதற்கு அவர் வேதபுத்தகம் ஐயா, உமக்கு ஒன்றுவிற்க எனக்கு மிகவும் விருப்பமாயிருக்கிறதென்றார். ஒரு உண்மையான வேதபுத்தகம் விற்பீராவென்று குரு கேட்க, ஆம் உண்மையான வேதபுத்தகம் கைக்காசுக்கே விற்பேனென்றார். உடனே சிப்பத்தை அவிழ்த்து ஒரு புதியேற்பாட்டைக் குருவுக்கு விற்றார். விற்றபின் உடனே தன் சிப்பக்கட்டையும் எடுத்துக்கொண்டு பயணம்பிறப்பட, குருவானவர் அவரைப்பார்த்து மிகவும் பிரயாணத்தால் இளைத்துப்போனவராகவிருக்கிறீரேஎன்க, ஆம் அது என் எசமானின் வேலைஎன்றார். உமது கால் மிகக் கடுக்கிறதல்லவா ஆம் அது என் எசமானின்வேலை, பின்னை உமது எசமானுக்கு உண்மையுள்ள பணிவிடைகாரனாகவிருக்கிறீரென்க, தன்சுயப்புகழைப்பற்றி புத்தகம்விற்பவர் பேசமனமில்லாமல் சம்பாஷணையைச் சுருக்கத்தில் முடித்துப் பிறப்பட்டார். ஆனால் குருவானவர் பொழுது அஸ்தமித்துவிட்டதே இராவைக்கு என்னுடன் தங்குமென்க, இல்லை நிற்கக்கூடாது என் எசமானின்வேலையைச் செய்யவேண்டுமென்க, நீர் இராவைக்கு எங்கேயாகுதல் தங்குகிறதல்லவா அப்படியாகில் என் வீட்டிற் தங்கும் என்றுவருந்திக்கேட்க, அவர் சம்மதித்துப்போய் இரண்டொருமணித்தியாலம் அவருடன் சம்பாஷித்து தன் [illegible]க்குப் போனார். குருவானவர் விடிய ஆறுமணிக்கு [illegible]ம்பித் தன் வேலைக்காரியைக் கூப்பிட்டு புத்தகம் விற்கிறவர் எழும்பிவிட்டாரா பார்த்துவாவென்க, ஆம் ஐயா அவர் இதற்கு மூன்று[illegible]யாலத்திற்கு முன் எழும்பி தன் எசமானின் வேலையைச் செய்யவேண்டுமென்று சொல்லிக்கொண்டுபோகிறார் என்றான்.

பிள்ளைகளே இதுவே மிகுந்தவிருப்பைக்காட்டுவதற்கு ஒருசரித்திரமாயிருக்கின்றது. லூதரென்பவர் மார்க்கசீர்திருத்தத்தைஉண்டாக்குமட்டும்தன்எசமானின்வேலையையேசெய்தார். ஆவேட் (Howard) என்பவர் ஐரோப்பாவிலுள்ள மறியற்சாலைகளெல்லாவற்றையும் கண்டு ஆத்மகாரியத்தைப் பேசும்படி தன் எசமானின் வேலையில் விழிப்புள்ளவராகவிருந்தார். உவில்வர்போஸ் (Wilberforce) கிளாக்ஸன் (Clarkson) பக்ஸ்தன் (Buxton) அடிமைகளை இஷ்டமாக்குமட்டும் தங்கள் எசமானின் வேலையை நடத்தினார்கள். இவர்களைப்போல நீங்களும் உங்கள் எசமானுடைய வேலையை நிறைவேற்றுமட்டும் மிகுந்த விருப்பமுள்ளவர்களாயிருங்கள்.

## எப்படிச் சீவித்தல்.

பல வருஷங்களுக்குமுன் போஸ்தன்நகரியில் வாழ்ந்த ஒரு துரைமகன் பணக்காரரும் அவர்கள் பின்னடியாரும் கூடியவளவு முட்டுப்பாடின்றிச் சீவனம்பண்ணுவதற்குத் தான் ஏற்படுத்திக்கொண்ட ஒரு ஒழுங்கைப்பற்றிச்சொல்வதை இவ்வூரிலுள்ள பெற்றோர் கவனித்துத் தாங்களும் அப்படி நடக்கும்படி இதை எழுதுகிறோம்.

இந்தத் துரைமகனுக்கு வருஷத்தில் ௨௰௲ம் ரூபாய் வருமானமிருந்தது. இவருக்குப் பட்டினத்தில் ஒரு வசதியான வீடும் கிராமத்தில்பசுந்தான இளைப்பாறுமண்டபமுமிருந்தது. இவருக்குப் பல புத்திரருண்டு. உச்சித இரதமும் முதற்தரக் குதிரையும் கெட்டிக்காரச் சாரதியுமுண்டு. ஒவ்வொருநாளும் தன் புத்திரர்களுடன் இரதத்திற் சவாரிசெய்து மனச்சந்தோஷமுள்ளவராகவிருப்பார்.

ஒருநாளில் அவ்வண்ணமாக சவாரிசெய்து வருகையில் தனது புத்திரர் தான் செய்துவரும் விதமாக ஒவ்வொருவருக்கும்ஒவ்வொரு இரதமும் ஒவ்வொரு குதிரையும் ஒவ்வொரு இரதசாரதியும் தங்களுக்குஇருக்கவேண்டுமென்று நினைப்பார்களென்றும் அப்படியில்லாதிருக்கில்மனச்சஞ்சலமுள்ளவர்களாவார்களென்றும், எண்ணி தான் சீவனுடனிருக்கையில் எவ்வகைப்பட்ட முன்மாதிரி வைக்கவேண்டுமென்று சிந்தித்தான். தன்னைப்போலத் தன் பிள்ளைகள் எல்லாருமிருப்பது கூடாதகாரியமென்றுணர்ந்தும் பெரும்பாலும் வறுமையே மனுஷனுக்கு நிசமென்றுணர்ந்து தனது இரதத்தையும் குதிரையையும் கடைக்கனுப்பி விலைக்கிரயம்பண்ணுவித்துப்பருமட்டமான வண்டிலொன்றும் நடபடியான சாட்டுக்குதிரையும் வாங்கி தானே அதை ஓட்டுகிறவராகவிருந்தார்.

அநேகர் இப்படிச் செய்வதற்கு முகாந்தரம் என்னவென்று கேட்டவிடத்தில் என் பிள்ளைகளை நான் நேசிக்கிறேன். மனுஷருக்கு ஐசுவரியம் நிசமல்ல வறுமையே நிசம். அவர்கள் தரித்திரத்திலும் சந்தோஷமாகவிருக்கும்படிக்கு நான் இம் முன்மாதிரியை வைக்கிறேன். நான் முன் நடந்தபடி எல்லாரும் நடக்கக்கூடியவர்களென்று நம்பவில்லை. பிள்ளைகளை ஐசுவரியமுள்ளவர்களாக்குகில் இதுவே தகுதியென்றார்.

பெற்றோரும் பிள்ளைகளும் நற்படிப்பினையைக் கற்றுக்கொள்ளுங்கள். உண்பனவு உடுப்பனவு நடப்பனவு என்பவைகளில்உங்கள் பிள்ளைகளுக்கு எவ்வகையானமுன்மாதிரியை வைக்கிறீர்கள். இயல்புக்குச் சரியாக நடப்பதைத் தானும்இத்துரைமகன் தன்பிள்ளைகளுக்காகவெறுத்தார். தன்னை ஒறுத்தல் தன் புத்திரருக்கு நயமென உணர்ந்ததுபோல நீங்களும் உங்கள் நயங்களை உங்கள் புத்திரர்நிமித்தம் ஒறுப்பது மேன்மை.



சகோதரனை விற்றல்.

பிள்ளைகளே, ஒரு பிதாவுக்கு பன்னிரண்டு புத்திரருண்டு. அவர்களெல்லாருஞ் சகோதர ஐக்கமுள்ளவர்களாக விருக்கவில்லை. அப்புத்திரரிலொருவன் தன் சகோதரர் செய்துவருங் குற்றங்களை பிதாவுக்கு அறிவித்துவருவான். அன்றியும் அந்தப்பிதா அவனைத் தன் விருத்தாப்பிய வயதிற் பெற்றதினால் எல்லாரிலும் அதிகமாக நேசித்தான். இப்படியிருக்குங்காலத்தில் அந்தப் புத்திரன் ஒரு சொப்பனங்கண்டு தன் சகோதரருக்குச் சொன்னான். சொப்பனம என்னவெனில் தன்னுடைய அரிக்கட்டு நிமிர்ந்துநிற்கவும்தன் சகோதரர்களின் அரிக்கட்டுகள் அதைச்சுற்றி தாழ்ந்து வணங்கவும் கண்டேனென்றான். இதினாலும் சகோதரர் அவனைப் பகைத்தார்கள். பின்னொரு தினத்தில் சந்திரனுஞ் சூரியனும் பதினொரு நட்சத்திரங்களும் தன்னை வணங்கினதாக ஒரு சொப்பனங்கண்டு அதையும் சொன்னான். அபபொழுது அவர்கள் முன்னையிலும் மும்மடங்காக அவனை வெறுத்தார்கள்.

ஒருநாள் அவனுடைய பிதா அவனை அழைத்துப்போய் உன் சகோதரரின் சுகசெய்தியையும் ஆடுகளின் தன்மையையும் பார்த்து வாவென்று அனுப்ப, அவர்கள் அவனைக்கண்டு சொப்பனக்காரன் வருகிறான் அவனைக் கொன்றுபோடுவோமென்று ஆலோசிக்கும்பொழுது, மூத்த தமையன் அப்படியல்ல, அவனைக் கொல்லாமற் பாழ்க்குழியிலே போடுவோமென்றான். அதற்கு இணங்கி அவர்கள் அப்படியேசெய்தார்கள். பின்பு வேறொரு சகோதரன் நமது சகோதரனைக் கொல்வதினாற் பலனென்ன அவனை வியாபாரிகளுக்கு விற்றுப்போடும்படி அவர்களைச் சம்மதப்படுத்தி அவனை இருபது வெள்ளிக்காசுக்கு விற்றுப்போட்டான்.

இது ஆரென்று அறிவீர்களா? சொல்லுகிறேன் யாக்கோபுக்கு பன்னிரண்டு புத்திரர். யோசேப்பு என்பவன் பிதாவால் நேசிக்கப்பட்டவனும் சொப்பனக்கண்டவனும். இவனை மற்றுஞ் சகோதரர் பகைத்தார்கள். ரூபேன் என்பவனே கொலைசெய்யாமற் கிணற்றிற் போடச்செய்தவன், யூதா என்பவனே வியாபாரிகளுக்கு விற்றவன். படத்தின் வலப்பக்கத்தில் யோசேப்பு என்ற சிறுவனையும் அவன் சகோதரர் இருவரும் ஒருநாயும் நிற்கின்றது. சுரிகை அரையிற் கட்டிநிற்கிறவனும் கையிற் பைவைத்துக்கொண்டு காசு எண்ணிக்கொடுக்கிறவனும் வியாபாரிகளாகிய இஸ்மவேலர். காசுவாங்குகிறவன் யூதா. மற்ற ஐவரும் யூதாவின் சகோதரர். இந்த யோசேப்பு என்பவன் தேவனுக்குப் பயந்துநடந்ததினால் எகிப்தின் இராசாவின் முதல் மந்திரியாயிருந்து பஞ்சகாலத்தில் தன் பிதாவுக்கும் சகோதரருக்கும் அன்னமிடுந் தாதாவாக இருந்தான். அவர்கள் செய்த கொடுந்தீமைக்குப் பழிவாங்காமல் அவர்களை ஆதரித்துவந்தான். இவனுடைய சரித்திரத்தை ஆதிஆகமம் ௩௭ ம் அதிகாரந்துவங்கி வாசித்துப்பாருங்கள்.

இது நற் படிப்பினையுள்ள சரித்திரம். யோசேப்பைப்போல சோதினைகளை வென்று நடந்தால் தேவகடாட்சம் உங்களுக்கு கிடைக்கும்.

## விழிப்பு.

ஒரு குப்பைமேட்டில் சேவல் நின்று கூவினதை ஒரு நரி கண்டு அதைக் கிட்டிப் பிடிக்கிறதற்கு உபாயம்பண்ணிச் சொன்னதாவது. ஐயாவே உமது இனிய ஓசையைக் கேட்டவுடன் எனது மனம் அக்களிப்புக்கொண்டது. நான் நெடுநாளாக உம்மைக் காணும்படி ஆசித்தேன். இன்றைக்குத்தான் சமயங்கிடைத்தது. நீர் சமஸ்தபூரணவடிவுநிறைந்த பட்சி. எல்லாவற்றிலும் உமது குரலே என்னை மயக்குகிறது. இவ்வளவுகாலத்திற்கும் இக்குரல்போலொருபொழுதுங் கேட்டதில்லை. கேட்டிருக்கில் உமது பிதாவுடைய குரலைக் கேட்டிருப்பேன். அவரிலிருந்த நூதனமென்னவெனில் கண்களை மூடிக்கொண்டு கூவுவார். நல்லது நானும் அப்படிச்செய்வேனென்று சேவல் சொல்லித் தன் கண்களை மூடிக்கொண்டு கூவ ஆரம்பிக்கையில் நரி பிடித்துக்கொண்டோடினது. இதைச் சில இடையர் கண்டு தங்கள் நாய்களை நரியில் உஞ்சுக்காட்ட நாய்கள் வருவதைச் சேவல்கண்டு நரியனாரே நான் உமது சினேகிதனென்று நாய்களுக்குச் சொல்லும், அப்பொழுது நாய்கள் உம்மைவிட்டுப்போமென்றது. நரி இவ்வார்த்தையை நம்பிக்கொண்டு அப்படிப் பேசவாய்திறக்கையில் சேவலுடனே ஒருமரத்தின்மீது பறந்து நரியைக் கேலிபண்ணிற்று. எப்படி, ஊமையாகவிருக்கவேண்டிய வேளையிற் பேசுகிறவனுக்கு ஐயோ! கண்கள் விழித்திருக்கவேண்டியவேளையில் கண்களை மூடுகிறவனுக்கு ஐயோ! என்றது.

## கொலையும் பூதக்கண்ணாடியும்.

இங்கிலாந்திலிருக்கும் நோர்விச்சு (Norwich) என்ற பட்டணத்திலுள்ள நியாயஸ்தலத்தில் ஒரு கொலைகாரியஞ் சில வருஷங்களுக்குமுன் விசாரிக்கப்பட்டது. அக்கொலையைப் பூதக்கண்ணாடியே வெளிப்படுத்தினது. ஒருநாட்காலையில் வயல்வெளியில் குரல்வளை அறுக்கப்பட்டு மரித்துக்கிடக்கிற ஒரு பெண்பிள்ளை கண்டெடுக்கப்பட்டாள். அன்று காலமே அவளுடன் கூடவயல் வெளியில் நின்ற அவள் மாதாவே அதைச்செய்தாளென்ற அசகை உண்டாயிற்று. நியாயஸ்தலத்திற் கேட்கப்பட்ட கேள்விகள் எல்லாவற்றிற்கும் சற்றுந் தாமதமின்றி அந்த மாதா தெளிவாக உத்தரஞ்சொன்னாள். தன் பிள்ளையுடன்வயலில் தானுங் கூட நின்றதென்று ஒத்துக்கொண்டாள். ஆனாற் பிள்ளை புஷ்பங்கொய்வதற்காகத் தன்னை விட்டுப் பிரிந்துபோனதென்றும், அதின்பின் தான் பிள்ளையைக் காணவில்லையென்றுஞ் செத்துக்கிடக்கையிற்கண்டதென்றுஞ் சொன்னாள். ஆகிலும், இவள் வீட்டைப் பரிசோதித்தவிடத்தில் ஒரு கொம்பிடியுள்ள கத்தி காணப்பட்டதென்றும், அக்கத்திப்பிடியில் சில மயிர் ஒட்டியிருந்ததாகவும், அம்மயிர் மிகவும் மிருதுவாகவிருந்ததினால் மனுஷருடையமயிரோ அல்லவோவென்று சொல்லகூடாததாகவிருந்தது. குற்றஞ்சாற்றப்பட்ட தாயானவள் அன்றுகாலமே கன்னியில்ஒரு வெள்ளைமுயல் பட்டதென்றும் அக்கத்தியினால் அதின் கழுத்தைத் தான் அறுத்ததென்றுஞ் சொன்னாள். ஆனாற் கத்தியைப் பரிசோதிக்கும்படி லண்டன்பட்டினத்திற்கு அனுப்பினார்கள். கத்தியோ முன் கழுவப்பட்டிருந்தது. கத்தியைப் பிடியைவிட்டுக் கழற்றிப் பிடியைப்பூதக்கண்ணாடியினாற் பரிசோதித்தபொழுது இரத்தக்கறை காணப்பட அவ்விரத்தம் மனுஷர்களுடைய இரத்தமென்றதாக ஒப்பனைபண்ணப்பட்டது. ஆனாற் காரியத்தை அறியாத கண்ணாடிக்காரன் பிடியில் ஒட்டியிருந்த மயிர் அணிலின் மயிரென்று நிச்சயமாகச் சொன்னான். அந்தப்பிள்ளை மரித்தபொழுது அவள் மேலில் அணில்மயிராற் செய்யப்பட்ட கம்பளி யுத்தரீகமிருந்ததினால் தாயே அவளைக் கொலைசெய்ததாகத் தீர்த்தார்கள். ஆனால் அவளைத் தூக்குஞ் சமயத்தில் தன் குற்றத்தை அறிக்கைசெய்தாள்.

பிள்ளைகளே, ஒருதாயானவள் தன் பிள்ளையின் கழுத்தை அறுத்ததைப்பற்றி வாசிக்கையில் இரண்டு வேதவாக்கு நமது மனதில் ஞாபகமாக வருகின்றது. "ஸதிரீயானவள் தன் கர்ப்பத்தின் பிள்ளைக்கிரங்காமல் தன் குழந்தையை மறப்பாளா, அவர்கள் மறக்கவுங் கூடும், நானோ உன்னை மறவேன்" என்ற வாக்கும் "உங்கள் பாவம் உங்களைக் கண்டுபிடிக்கும்" என்ற வாக்கும் நமது மனதில் உறைக்கின்றன. தீயன் தண்டனைக்குத் தப்பான். மெய்யாக நம்புங்கள்.

## யுத்தம்.

தற்காலத்திலே புருஷியருக்கும் அவுஸ்திரியருக்கும் யுத்தம் நடக்கிறதென்று கேள்விப்படுகிறீர்கள். சிறிதகாலங்களுக்குமுன் அமெரிக்காவிலுள்ள ஐக்கியதேசத்தாருக்குள்ளும் மெக்சிகோநாட்டாருக்குள்ளும் யுத்தம் நடந்தது.

இப்போர்கள் உங்களுக்கு என்னத்தை ஞாபகப்படுத்துகின்றது? எங்கள் இரட்சகர் சொன்ன வாக்குகளை மத்தேயு ௨௪ ம் அதிகாரத்தில் வாசித்துப்பாருங்கள்.

"Why sleep ye my Brethren?"

## புத்திபோதனை.

11 s.

௧. ஏன் தூங்கி நிற்கிறீர்கள்? சகோதரரே,
ஆ! வெற்றிசிறந்தோர் பின்னிட்டீர்களே,
பூலோகத்தை விட்டுப் பரத்திற் சேர்வோம்.
எல்லாருஞ் சீர்கொள்ள விழித்திருப்போம்.

௨. ஏன் தூங்கி நிற்கிறீர்கள்? கர்த்தாவே வந்தார்,
கெட்டோர்களை மீட்க அழைத்தும் நிற்கிறார்.
இளைத்தோரைத் தாங்கி சலிப்போரையே
மா ஆறுதல் செய்வார் யெகோவா தாமே.

௩. ஏன் தூங்கி நிற்கிறீர்கள்? ஆ! பாவிகளை
வளைந்து, நெருங்கிக், கெடுக்க வகை
பார்க்கிறார்கள் அனேகர், அறிந்தாதலால்
மா சாபம் வராதோ? நாம் தூங்கிவிட்டால்.

௪. ஏன் தூங்கி நிற்கிறீர்கள்? குமாரன் வந்தார்
போதித்து, மரித்து, கெட்டோரைக் கொண்டார்.
இரக்கம் விளங்க,—தீர்ப்பாகும் நீதி,
ஒன்றான கர்த்தாவுக்கே என்றும் துதி.

௫. ஏன் தூங்கி நிற்கிறீர்கள்? சா சீக்கிரமாய்
வந்திடும். ஆ! பாவிகள் மா கொடிதாய்
கலங்கிப், புலம்பிப்,—போகாப்படியே
தூங்காமல் இருங்கள், சகோதரரே.

௬. ஏன் தூங்கி நிற்கிறீர்கள்? ஆ! பாவிகளே,
விழித்துப் பாருங்கள்—ஒதுக்கிடமே
உண்டோ? யேசுவண்டை வராமல் விட்டால்
மா சாபம் பலிக்கும், யெகோவாவினால்.

## சத்தியவேதக் கேள்வி.

௭ம் பாடம்.

முதலாம் அற்புதம். யோவா. ௨: ௧—௰௧.

௧. விவாகச் சடங்கு எவ்விடத்தில் நடந்தது?

௨. கானாவெங்கே? நாசரேத்துக்கு ௬ அல்லது ௭ மைல் தூரத்திலிருக்கிறது.

௩. விவாகத்துக்கு அழைக்கப்பட்டவர்களார்?

௪. விவாக வீட்டில் என்ன பானம்பண்ணுவார்கள்?

௫. யூதரின் விவாகச்சடங்கு எவ்வளவு காலத்துக்கு நிற்கும்? பலநாளாக.

௬. இரசங்குறைந்தபொழுது யேசுவின் மாதா என்ன சொன்னாள்?

௭. அதற்கு அவரென்ன மறுமொழி சொன்னார்?

௮. மாதா பணிவிடைகாரருக்கு என்னசொன்னாள்?

௯. எத்தனை தண்ணீர்க்குடங்களிருந்தன?

௰. யேசு பணிவிடைக்காரருக்கு என்னசொன்னார்?

௰௧. அதன்பின்பு என்னசொன்னார்?

௰௨. விருந்தின் தலைவன் உருசிபார்த்து என்னசொன்னான்?

௰௩. இவ்வற்புதம் என்னத்தைக்காட்டினது? யேசுவின் வல்லமையையும் அவருடைய மகிமையையுங் காட்டினது.

## அப்படிச் சொல்லுகிறார்கள்.

அப்படிச் சொல்லுகிறார்கள் என்பவனை அறிவீர்களா? அவனை நல்லாகப் படித்து அறிந்தால் அநேக தீமைகளுக்கு விலகிக்கொள்ளலாம். அப்படிச் சொல்லுகிறார்கள் என்பவனின் சத்தத்திற்கு செவிகொடுக்கவும் மாட்டோம். இவன் உலகம் எங்கும் அறியப்பட்டவன். இவனுடைய பெயரை எவ்விடத்திலும் எல்லாருஞ் சொல்லுகிறார்கள். பெரியவர்களுங்கீழானவர்களும் ஐசுவரியவான்களும் வறியவர்களும் சீர்திருந்தினவர்களும் வேடரும் இவன் நாமத்தைச் சொல்லுகிறார்கள். அப்படிச்சொல்லுகிறார்களென்னும் பெயர் விட்டுச்சொல்லாய்விட்டது. இவனுடைய சிறிய விருத்தாந்தத்தைப்பற்றி ஆர் எழுதியிருக்கிறார்கள்.

இவனுடைய பெற்றார் ஆர்? இவன் பிதாவின் நாமம், கோள். மாதாவின்நாமம், அலப்பி. இவனுடைய வமிச வரிசையைப்பற்றி ஒன்றுமறியோம். இவன் பாவம் என்னும் இராச்சியத்திலுள்ள தற்கீர்த்தி என்னும் பட்டினத்திற் பிறந்தவன். இவனுடைய காலஉற்பத்தி எப்பொழுதென்று தெரியாது; ஆகிலும் ஆதாமும் ஏவாளும் பரதீசைவிட்டப்புறப்பட்ட நாளில் இவன் உற்பத்தியானானென்றெண்ண இடமுண்டு. இவன் நீடூழியாகவிருக்கிறான். இவன் விருத்தனாகவில்லை. இவன் பெலசாலியும் முயற்சியுள்ளவனுமாகவிருக்கிறான். தொய்ந்துபோகவில்லை. இவனுடைய அறிவு சொற்பம். இவன் பெற்றுக்கொண்ட அறிவு கேள்வியேயன்றிப் பின்னொன்றல்ல. இவன் சொற்ப அறிவுள்ளவனானதால் எப்பொழுதுந் தொல்லையையுண்டாக்குகிறான். ஒருக்காலும் நிசமென்று சொல்லான். அப்படியாக்கும் இப்படியாக்கும் என்பதே அவன்வாயிற்சொல். அப்படிச்சொல்லுகிறார்கள் என்பவனை ஆராகுதல் கண்டீர்களோ? பிள்ளைகளே நீங்கள் கண்டீர்களா? இவன் பரிசிக்கக் காணக்கூடியவனல்ல. ஆனால் அவன் இருக்கிறான் ஏனெனில் எல்லாரும் அப்படிச் சொல்லுகிறார்கள் என்பவனைப்பற்றிப் பேசுகிறார்கள். நாம் சொல்லுகில் அவன் இருக்கிறானென்றும் இல்லையென்றும் சொல்லுவோம். அவன் எங்குமுண்டு எங்குமில்லை என்போம். இவனைப்பற்றி நம்மாற் சொல்லமுடியாது. இவனுடைய நடையைப் பற்றித் துன்மார்க்கத்திற் கீர்த்திபெற்றவன். ௧ வது அவன் கோட்காரன். ௨ வது எத்தன். ௩ வது பொய்யன். ௪ வது சமாதானங்கொல்லி ௫ வது சகல துற்குணமும் நிறைந்தவன்.

பிள்ளைகளே, அப்படிச்சொல்லுகிறார்கள் என்பவனுக்கு உங்களைக் காத்துக்கொள்ளுங்கள் அவன் உங்களிற் கொஞ்ச இடங்கண்டால் மிஞ்ச இடம்பெறுவன். இளமையிலிவனுக்கு விலகிநடவுங்கள். சரியென்று ஒப்புக்கொள்ளக்கூடியவைகளை அனுட்டியுங்கள். அப்படிச்சொல்லுகிறார்கள். இப்படிச் சொல்லுகிறார்களென்னும் வாக்குகளை அப்புறப்படுத்துங்கள்.

## பிள்ளைகளின் சபைப்பழக்கம்.

௧. ஆம், இல்லையென்று மொட்டையாகப் பேசாமல் ஐயா என்னும் வார்த்தையைச் சேர்த்துச் சொல்லுங்கள். ஒன்றைப் பெற்றுக்கொள்ளும்பொழுது மௌனமாகநில்லாமல் உபகாரமென்றுசொல்லுங்கள். கொச்சையாகப் பேசாதேயுங்கள்.

௨. முகம், வஸ்திரம், பாதம், நகம் முதலியவைகள் பவுத்திரமாகயிருக்கில் நல்வளர்ப்புள்ளவர்கள் என்பார்கள். துப்பரவு மேன்மையைக் காட்டும்.

௩. எப்பொழுதும் பெரியவர்களுக்கும் விருந்தருக்கும் எழும்பி ஆசாரம்பண்ணி அவர்களுக்கு ஆசனங்கொடு.

௪. உரத்துச்செருமுதல் இருமுதல் நாறித்துப்புதல் கொட்டாவிவிடுதல் தும்முதல் கெட்ட வளர்ப்பைக்காட்டும். அப்படிப்பட்ட வேளைகளில் உன்வாயைக் கையினாற் பொத்து.

௫. புகையிலை சப்பாதே, குடியாதே, சத்தியம்பண்ணாதே, சூதாடாதே, பொய்சொல்லாதே, களவெடாதே, ஏயாதே, அலப்பாதே.

மரியாதையாயிரு, தயாளனாயிரு, கோர்த்தியாயிரு, தெண்டித்துப்படி, சரீரம்சலிக்க விளையாடு, நீதியாகநட, பயப்படாதே, நற்புத்தகங்களை வாசி.

## காகங்களின் நீதிஸ்தலம்.

புரட்டாசி ஐப்பசி கார்த்திகை மாதங்களில் ஓர்வகைக் காகம் இங்கிலாந்தின் தென்பக்கத்தில் வந்தடையும். அவைகளை முடிக்காகம் (Hooded Crow) என்பார்கள். பங்குனி சித்திரை மாசங்களில் இவைகள் வட பக்கங்களிற் செல்லும். அவைகள் மனுஷருடன் ஊடாடி அவர்கள் முற்றங்களிற் சென்று தங்கள் இரைகளைப் பொறுக்கும். சாதாரண காகங்களைப் போல அவைகளின் நிறமில்லை. முதுகுப்பக்கம் சாம்பர்நிறம். தலையுங் கழுத்தும் சிறகும் வாலும், கறுப்புநிறம். அவைகள் இரண்டுவகையாகக் கத்தும். ஒன்று காகத்தின் சத்தம். மற்றது சேவல் கூவுகிறதுபோலிருக்கும். இப்பட்சிகள் மிருதிபாக வசிக்குமிடத்தில் நூறு இருநூறு ஒருமிக்கக் கூடி ஏதோ ஒரு காரியத்தை ஆராய்வதுபோற் காணப்படும். இவ்வேளைகளிற் சில தங்கள் தலைகளை தூங்கவிட்டபடியிருக்கும். சில தங்கள் தலைகளை நிமிர்த்திக்கொண்டு காரியங்களை ஓடி ஆடிப் பார்ப்பதுபோற் தெரியும்.

அவைகள் கூடி ஒரு மணித்தியாலத்தில் கூட்டங் கலைந்து பறக்கும். அவ்வேளையில் ஒன்று அல்லது இரண்டு காகம் செத்துக்கிடக்கும். இக் கூட்டம் தப்பிதமாக நடந்த காகங்களைத் தண்டிக்கும்படி வைக்கப்படுங் கூட்டமென்று எண்ணப்படுகிறது.

பிள்ளைகளே, இதின் படிப்பனை என்ன? தப்பிதஞ் செய்வோர் தண்டனைக்குத் தப்பமாட்டார்கள். பிள்ளைகளாகிய நீங்கள் தப்பிதஞ் செய்தால் உங்களை விசாரிப்பதற்கு ஒருவரல்லப் பலரிருக்கிறார்கள். உங்கள் பெற்றார் உங்கள் உவாத்தி, உங்கள் போதகர், நீதவான்கள், இவர்களெல்லாரும் உங்களை விசாரிக்க இருப்பதால் புத்தியாக நடவுங்கள். இராசாக்கள் உங்களை வதைப்பார்கள். இவர்களெல்லாருக்கும் மேலாக யாதொரு சாட்சியின்றி தேவன் உங்களை நியாயந்தீர்ப்பார். அவர் தீர்ப்பு சரியாகவிருக்கும். நித்தியமரணமே பொல்லாத பிள்ளைகளுக்குக் கிடைக்குந் தண்டனை.

## நாட்துவக்கம்.

ஐரோப்பாவிலுள்ள அனேகசாதியார் அர்த்தராத்திரியில் தங்கள் நாள்களைத்துவக்கி எண்ணுகிறார்கள். இவ்வகையாகப் பூர்வீகத்தார் கைக்கொள்ளவில்லை. தற்காலத்திலும் முக்கால்வாசிப்பேரளவுக்கு இப்படி எண்ணவில்லை. அதிபூர்வீகசனங்களாகிய பாபிலோனியர் பார்சியர் இந்தியர் சூரியோதயந்துவங்கி நாள் எண்ணுகிறார்கள். தற்காலத்திலுள்ள கிரேக்கரும் இவ்வகையாகக்கொள்ளுகிறார்கள். யூதரும் பூர்வீககிரேக்கரும் சூரிய அஸ்தமனந்துவங்கி நாட்களை எண்ணுகிறார்கள். எகிப்தியர் மத்தியானந்துவங்கி எண்ணுகிறார்கள். வானசாஸ்திரிகள் தங்கள் கணிதங்களை இவ்வகையாகக் கணித்து எழுதுகிறார்கள். மகமதியர் புல்லொளியானவேளைதுவங்கி எண்ணுகிறார்கள.

## அருமையான கிறிஸது.

யேசுக்கிறிஸது எப்பொழுதும் உனக்குச் சமீபத்தில் நிற்கிறார். அவருடைய போதனைகளின்படிசெய்யவும் அவைகளைப் படிப்பிக்கவும் அவரை உன்போதகராக எண்ணிப்போ.

அவருடைய கட்டளைப்படி செய்யவும் அவருக்கு உண்மையாக ஊழியஞ்செய்யவும் அவரை உன் ஆண்டவராக எண்ணிப்போ. பாவத்தில் நின்று உன் இருதயத்தைச் சுத்திகரிக்கவும் இரத்தத்தினால் நீ சுத்தமடையவும் அவரை உன் இரட்சகராக எண்ணிப்போ. உன் ஆத்துமத்துக்கு வேண்டிய கட்டளைகளைப் பெறவும் கட்டளைகளுக்குக் கீழ்ப்படியவும் அவர் ஆளுகையை எதிராதபடிக்கும் அவரை ஒரு இராசாவாக எண்ணிப்போ. கெட்டுப்போன ஆடாகவும் தமது மந்தைக்குள் உன்னைச் சேர்த்துக்கொள்ளும்படியாகவும் அவரை ஒரு மேய்ப்பனாக எண்ணிப்போ.

Printed and Published for the Youth's Christian Association, by N. Strong, at the Press of Ripley & Strong, Manepy, Jaffna.